## ஒரு பார்வை - பகுதி 1

ஸூரா அள்ளுஹா - முந்தைய காலத்தை விட பிந்தைய காலம் சிறந்ததாக இருக்கும் என்று நபி (ஸல்) அவர்களுக்கு நற்செய்தி கூறப்பட்டுள்ளது.

ஸூரா அஷ்ஷரஹ் - அல்லாஹ், நபி (ஸல்) அவர்களின் நெஞ்சை விரிவாக்கி, வேத அறிவிப்பையும் நபித்துவப் பழுவையும் ஏற்கும் சக்தியை வழங்கி, அவர்களுடைய புகழை உயர்த்தினான்.

ஸூரா அத்தீன் - இறைமறுப்பாளர்களைத் தவிர மற்ற மனிதர்கள் அனைவரும் அல்லாஹ் படைத்ததில் மிகச் சிறந்தவர்கள்.

ஸூரா அல்அலக் - முதல் வஹீ "இக்ரா பிஸ்மி" இந்த ஸூராவின் ஒரு பகுதியாகும்.

ஸூரா அல்கத்ர் - குர்ஆன் அருளப்பட்ட லைலத்துல் கத்ரின் இரவு ஆயிரம் மாதங்களை விடச் சிறந்ததாகும்.

## தராவிஹ் - 27: (ரக்அத் 1 முதல் 4)

**ஸூரா - 93, அள்ளுஹா; வசனம்: 1 - 11; பிரிவு: 1**

(பின்னணி: நபி (ஸல்) அவர்களுக்கு வஹீ இறங்க ஆரம்பித்த பின், சிலகாலம் வஹீ இறங்காமல் இடைவெளி இருந்தது. அப்போது கா:ஃபிர்கள் அல்லாஹ், நபியை கைவிட்டுவிட்டதாக பரிகாசம் செய்தனர். இதனால் நபி (ஸல்) அவர்கள் கவலையுடன் இருந்த போது, இந்த வசனங்கள் இறங்கின).

1. முற்பகல் மீது சத்தியமாக! அமைதி அடைந்த இரவின் மீது சத்தியமாக! நபியே! உமது இறைவன் உம்மைக் கைவிடவுமில்லை; வெறுக்கவுமில்லை. (ஸூரா - அள்ளுஹா)

2. நிச்சயமாக உமக்கு இம்மையைவிட மறுமையே சிறந்தது. இறைவன் விரைவில் உமக்கு (உயர் பதவிகளை) வழங்குவான். அப்போது நீர் திருப்தி அடைவீர். (ஸூரா - அள்ளுஹா)

3. உம்மை அனாதையாகக் கண்டபோது, அவன் உமக்கு ஆதரவளிக்கவில்லையா? வழிதெரியாது திகைத்தவராக உம்மைக் கண்டபோது, அவன் உமக்கு நல்வழி காட்டவில்லையா? வறியவராக உம்மை கண்டபோது, அவன் உமக்கு தன்னிறைவைத் தரவில்லையா? (ஸூரா - அள்ளுஹா)

4. ஆகவே, அநாதைகளை நீர் கடுகடுக்காதீர்; யாசிப்பவரை நீர் விரட்டாதீர். (ஸூரா - அள்ளுஹா)

5. உமது இறைவனின் அருட்கொடைகளை நீர் எடுத்துரைப்பீராக! (ஸூரா - அள்ளுஹா)

**ஸூரா - 94, அஷ்ஷரஹ்; வசனம்: 1 - 8; பிரிவு: 1**

(பின்னணி: நபி (ஸல்) அவர்களுக்கு, அல்லாஹ் வழங்கிய அருட்கொடைகளில் சில இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. 1. அல்லாஹ், நபியவர்களின் நெஞ்சை விரிவாக்கி, வேத அறிவிப்பையும், நபித்துவப் பழுவையும் ஏற்கும் சக்தியை வழங்கினான். 2. மக்கள் வழிகேட்டில் இருப்பதைத் தாங்கிக் கொள்ளமுடியாத நபியவர்களின் மனபாரத்தை அகற்றினான். 3. எவரும் அடைய முடியாத புகழின் உச்சிக்கு அவர்களை உயர்த்தினான்).

6. நபியே! உமது நெஞ்சை நாம் விரிவடையச் செய்யவில்லையா? உமது முதுகை அழுத்திக்கொண்டிருந்த

சுமையை உம்மை விட்டு இறக்கினோம். உமது புகழை நாம் உயர்த்தினோம். (ஸூரா - அஷ்ஷரஹ்)

7. நிச்சயமாக ஒவ்வொரு கஷ்டத்துடனும் சுகம் இருக்கிறது. நிச்சயமாகவே ஒவ்வொரு கஷ்டத்துடனும் சுகம் இருக்கிறது. (ஸூரா - அஷ்ஷரஹ்)

8. நபியே! உமது அலுவல்கள் முடித்து விட்டால், இறைவணக்கதிற்குத் தயாராகி விடுவீராக! உம்முடைய இறைவனின் பக்கமே நீர் ஆர்வம் காட்டுவீராக! (ஸூரா - அஷ்ஷரஹ்)

**ஸூரா - 95, அத்தீன்; வசனம்: 1 - 8; பிரிவு: 1**

9. அத்திப் பழத்தின் மீது சத்தியமாக! ஜைத்தூன் எண்ணெய் மீது சத்தியமாக! ஸினாய் மலை மீது சத்தியமாக! பாதுகாப்பான அந்த ஊர் (மக்கா) மீது சத்தியமாக! (ஸூரா - அத்தீன்)

10. நிச்சயமாக நாம், மனிதனை அழகிய அமைப்பில் படைத்தோம். பின்னர் (அவன் தீய செயல்களின் காரணமாக) அவனைத் தாழ்ந்தவர்களிலும், தாழ்ந்தவனாக நாம் ஆக்கினோம்; ஈமான் கொண்டு நற்செயல்கள் செய்தோரைத் தவிர. (ஸூரா - அத்தீன்)

11. அவர்களுக்கு முடிவில்லா நற்கூலி உண்டு. (ஸூரா - அத்தீன்)

12. மனிதா! இதற்குப் பிறகும், தீர்ப்பு நாளை நம்பாமல் உன்னை மறுக்கவைப்பது எது? (ஸூரா - அத்தீன்)

13. அல்லாஹ், நீதியாளர்களுக்கெல்லாம் மேலாக சிறந்த நீதியாளன் இல்லையா? (ஸூரா - அத்தீன்)

**ஸூரா - 96, அல்அலக்; வசனம்: 1 - 19; பிரிவு: 1**

(பின்னணி: இந்த ஸூராவின் முதல் 5 வசனங்கள் திருக்குர்ஆனில் முதலாவதாக, ரமலான் மாதத்தில் நபி (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்டவை)

1. (நபியே) படைத்த உமது இறைவனின் பெயரால் ஓதுவீராக! அவனே 'அலக்' என்னும் இரத்தக் கட்டியிலிருந்து மனிதனை படைத்தான். ( ஸூரா - அல்அலக்)

2. ஓதுவீராக! உம் இறைவன் மாபெரும் கொடையாளி. அவனே மனிதனுக்கு எழுதுகோலால் கற்றுக் கொடுத்தான். அவனே மனிதனுக்கு, அவன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தான். (ஸூரா - அல்அலக்)

(பின்னணி: தொழுகையின் போது நபி (ஸல்) அவர்களுக்கு, அபூஜஹ்ல் இடையூறு செய்து வந்தான். அவன் தனது காலால் நபியின் கழுத்தின் மீது வைத்து வேதனை செய்யப்போவதாக மிரட்டினான். இந்த ஸூராவின் மற்ற வசனங்கள் இந்நிகழ்வைக் குறிக்கின்றன).

3. அவ்வாறன்று, மனிதன் தன்னை தன்னிறைவு பெற்றவனாகக் கருதுகிறான். அதனால் அவன் வரம்பு மீறுகின்றான். மனிதா! உன் இறைவனிடமே நீ திரும்பி வர வேண்டியுள்ளது. (ஸூரா - அல்அலக்)

4. ஓர் அடியார் - அதாவது நபியவர்கள் தொழும்போது அவரைத் தடுப்பவனை - (அபூஜஹலை) நீர் பார்க்கவில்லையா? (ஸூரா - அல்அலக்)

5. (வரம்பு மீறுபவனே!) அவர் நேர்வழியில் இருந்தாலுமா நீ அவரை தடுப்பாய்? அல்லது இறையச்சத்தை அவர் ஏவினாலுமா நீ தடுப்பாய்? (ஸூரா - அல்அலக்)

6. நபியே! நீர் கவனித்தீரா? அவன் உம்மை நம்ப மறுத்து, புறக்கணித்துவிட்டான். (ஸூரா - அல்அலக்)

7. அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்பது அவனுக்குத் தெரியாதா? (ஸூரா - அல்அலக்)

8. இல்லை! அவன் இதிலிருந்து விலகிக் கொள்ளவில்லை என்றால், நிச்சயமாக அவனின் முன்னெற்றி முடியை நாம் பற்றி இழுப்போம். அது பொய் சொன்ன, தவறு செய்த முன்னெற்றி முடியாகும். (ஸூரா - அல்அலக்)

9. அவன் தன் அவையோரை (உதவிக்காக) அழைக்கட்டும். நாம் நரகத்தின் காவலர்களை (அவனை தண்டிக்க) அழைப்போம். (ஸூரா - அல்அலக்)

10. அவ்வாறன்று! (நபியே) அவனுக்கு நீர் கட்டுப்பட வேண்டாம். அல்லாஹ்வுக்கே ஸஜ்தா செய்வீராக! அல்லாஹ்வையே நீர் அணுகுவீராக! (ஸஜ்தா - 15) (ஸூரா - அல்அலக்)

**ஸூரா - 97, அல்கத்ர்; வசனம்: 1 - 5; பிரிவு: 1**

14. நிச்சயமாக நாம் இந்த குர்ஆனை லைலத்துல்கத்ர் என்னும் ஓர் இரவில் இறக்கி வைத்தோம். (ரமலானின் கடைசி 10 இரவுகளில் ஒன்று). (ஸூரா - அல்கத்ர்)

15. கண்ணியமிக்க இரவு எத்தகைய (மகத்துவமிக்கது) என்பதை உமக்கு அறிவித்தது எது? (ஸூரா - அல்கத்ர்)

16. லைலத்துல் கத்ர் இரவு ஆயிரம் மாதங்களை விடச் சிறந்ததாகும். (ஸூரா - அல்கத்ர்)

17. வானவர்களும், பரிசுத்த ஆன்மாவான ஜிப்ரயீல் (அலை) அவர்களும், அல்லாஹ்வின் அனுமதியுடன் (உலக வாழ்வு தொடர்பான) அனைத்துக் கட்டளைகளையும் கொண்டு, கீழே இறங்கி வருகிறார்கள். (ஸூரா - அல்கத்ர்)

18. அந்த இரவு சாந்தி பெற்ற இரவாகும்; அதிகாலை உதயமாகின்ற வரை. (ஸூரா - அல்கத்ர்)

## ஒரு பார்வை - பகுதி 2

ஸூரா அல்பய்யினா - வேதங்கள் கொடுக்கப்பட்ட மக்கள் (யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள்) தெளிவான சான்று வந்த பிறகும் கூட தங்களுக்குள் பல பிரிவுகளாக பிளவுபட்டிருந்தனர். நிராகரிப்பாளர்கள் படைப்புகளில் மிகக் கெட்டவர்கள். நம்பிக்கை கொண்டவர்கள் படைப்புகளில் சிறந்தவர்கள்.

ஸூரா அல்ஜில்ஜால் - நியாயத்தீர்ப்பு நாளில், பூமி தனது செய்திகளை அறிவிக்கும் மற்றும் மனிதர்களுக்கு அவர்களின் செயல் புத்தகங்கள் காண்பிக்கப்படும்.

ஸூரா அல்ஆதியாத் - குதிரைகள் அதன் உரிமையாளர்களுக்கு மிகவும் நன்றியுள்ளவையாக இருக்கும். ஆனால், மனிதன் அல்லாஹ்விற்கு நன்றியுடையவனாக இருப்பதில்லை.

ஸூரா அல்காரிஆ - தீர்ப்பு நாளின் ஒரு காட்சி விவரிக்கப்பட்டுள்ளது.

## தராவிஹ் - 27: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 98, அல்பய்யினா; வசனம்: 1 - 8; பிரிவு: 1

1. ஏக இறைவனை மறுத்த வேதக்காரர்களும், அவனுக்கு இணை வைப்போர்களும், தெளிவான சான்று அவர்களிடம் வரும் வரையிலும் தங்களது தவறான கொள்கையிலிருந்து விலகாமலேயே இருந்தனர். (ஸூரா - அல்பய்யினா)

2. அந்தச் சான்றுதான் அல்லாஹ்விடமிருந்து வந்த தூதர். அவர் செம்மையான சட்டங்களை உள்ளடக்கிய வேத ஏடுகளை ஓதிக்காட்டுவார். (ஸூரா - அல்பய்யினா)

3. ஆனால் தெளிவான சான்று வந்த பிறகும் கூட, வேதக்காரர்கள் அதாவது யூத, கிருத்தவர்கள் தங்களுக்குள் பல பிரிவுகளாக பிளவுபட்டிருந்தனர். (ஸூரா - அல்பய்யினா)

4. முந்தைய வேதம் கொடுக்கப்பட்ட மக்கள், அல்லாஹ்வை வணங்க வேண்டுமென்றும், தொழுகையை நிலைநாட்டி, ஜகாத்தை கொடுத்திட வேண்டுமென்றும், மேலும் இதுதான் நிலையான மார்க்கமென்றும் கட்டளையிடப்பட்டிருந்தனர். (ஸூரா - அல்பய்யினா)

5. ஏக இறைவனை மறுத்த வேதக்காரர்களும், அவனுக்கு இணை வைப்போர்களும் நிச்சயமாக நரக நெருப்பில் நிரந்தரமாக இருப்பார்கள். (ஸூரா - அல்பய்யினா)

6. அவர்கள்தான் படைப்புகளில் மிகக் கெட்டவர்கள் (பல்வேறு ஆதாரங்கள் வந்த பிறகும் கூட நம்ப மறுத்ததால்). (ஸூரா - அல்பய்யினா)

7. நிச்சயமாக யார் ஈமான் கொண்டு, நற்செயல்கள் செய்கின்றனரோ, அவர்கள் தான் படைப்புகளில் சிறந்தவர்கள். (ஸூரா - அல்பய்யினா)

8. அவர்களுடைய இறைவனிடத்தில் அவர்களுக்கான கூலி நிலையான 'அத்னு' என்னும் சுவனபதிகளாகும். அதன் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். அதிலேயே அவர்கள் என்றென்றும் நிரந்தரமாக இருப்பார்கள். (ஸூரா - அல்பய்யினா)

9. அல்லாஹ் அவர்களைப் பற்றி திருப்தி அடைந்தான்; அவர்களும் அல்லாஹ்வைப் பற்றி திருப்தி அடைந்தனர். தம் இறைவனுக்கு அஞ்சும் அத்தகையவருக்கே இந்த மேலான நிலை உண்டாகும். (ஸூரா - அல்பய்யினா)

**ஸூரா - 99, அல்ஜில்ஜால்; வசனம்: 1 - 8; பிரிவு: 1**

10. பூமி மிகுந்த அழுத்தத்திற்கு உள்ளாகி நிலநடுக்கம் ஏற்படுகின்ற போது, (ஸூரா - அல்ஜில்ஜால்)

11. இன்னும், அது தன் சுமைகளை வெளிப்படுத்தும் போது, "பூமிக்கு என்ன நேர்ந்தது?" என்று மனிதன் கேட்கும் போது, (ஸூரா - அல்ஜில்ஜால்)

12. அந்நாளில் பூமிதான் தன் செய்திகளை அறிவிக்கும்; அல்லாஹ் அதற்கு வஹீ அறிவித்த காரணத்தால். (ஸூரா - அல்ஜில்ஜால்)

13. அந்நாளில் மனிதர்கள் தாங்கள் செய்த செயல்களை காணும் பொருட்டு பலதரப்பட்ட நிலையினராய் பிரிந்து, கூட்டம் கூட்டமாக வருவார்கள். (ஸூரா - அல்ஜில்ஜால்)

14. எவர் அணு அளவு நன்மையை செய்தாரோ, அவர் அதனைக் கண்டுகொள்வார். எவர் அணு அளவு தீமை செய்தாரோ, அவர் அதனைக் கண்டுகொள்வார். (ஸூரா - அல்ஜில்ஜால்)

**ஸூரா - 100, அல்ஆதியாத்; வசனம்: 1 - 11; பிரிவு: 1**

15. மூச்சுத்தெறிக்க பாய்ந்து செல்கின்ற குதிரைகளின் மீது சத்தியமாக! கால்களால் உரசித் தீப்பொறி தெறிக்கச் செய்யக்கூடியவை மீது சத்தியமாக! (ஸூரா - அல்ஆதியாத்)

16. அதிகாலையில் விரைந்து சென்று, அதனால் புழுதியைக் கிளப்பி விட்டு, கூட்டத்தின் நடுவில் புகுந்து எதிரிகள் மீது பாய்ந்து செல்கின்ற குதிரைகள் மீது சத்தியமாக! (ஸூரா - அல்ஆதியாத்)

17. நிச்சயமாக மனிதன் தன் இறைவனுக்கு நன்றி கெட்டவனாக இருக்கின்றான். நிச்சயமாக அவனே இதற்குச் சாட்சியாகவும் இருக்கின்றான். (ஸூரா - அல்ஆதியாத்)

(அல்லாஹ் குதிரைகளை உதாரணம் காட்டி மனிதனை சிந்திக்க கூறுகிறான். மனிதன் குதிரைகளுக்கு உண்ண உணவும், பருக நீரும் வழங்குகிறான். அது மனிதனுக்கு நன்றியுடன் அவனது கட்டளைப்படி மரணப் பள்ளத்தாக்கில் பாய்ந்தோடுகிறது. ஆனால் மனிதனுக்கு அழகான வாழ்க்கை, உணவு, சகல வசதிகள், ஏனைய அத்தியாவசிய பொருட்கள் ஆகியவற்றை அல்லாஹ் வழங்கியிருக்கிறான். ஆனால் யார் வழங்குகின்றானோ அந்த அல்லாஹ்விற்கு விசுவாசமாக இருப்பதில்லை. இதற்கு அவனே சாட்சி).

18. நிச்சயமாக மனிதன் செல்வத்தை அளவுகடந்து நேசிக்கின்றான். (ஸூரா - அல்ஆதியாத்)

19. மறுமைக்காக மண்ணறையிலுள்ளவர்கள் வெளியேற்றப்பட்டு, அவர்களது உள்ளங்களில் உள்ளவற்றை அம்பலப்படுத்தப்படும் போது என்ன நடக்கும் என்று மனிதனுக்குத் தெரியாதா? (ஸூரா - அல்ஆதியாத்)

20. நிச்சயமாக அந்நாளில் அவர்களின் இறைவன் அவர்களைப் பற்றி நன்கு தெரிந்தவன் ஆவான். (ஸூரா - அல்ஆதியாத்)

**ஸூரா - 101, அல்காரிஆ; வசனம்: 1 - 11; பிரிவு: 1**

21. திடுக்கிடச் செய்கின்ற நிகழ்வு. திடுக்கிடச் செய்கின்ற நிகழ்வு என்றால் என்ன? திடுக்கிடச் செய்கின்ற நிகழ்வு என்பது என்னவென்று நபியே உமக்குத் தெரியுமா? (ஸூரா - அல்காரிஆ)

22. அந்நாளில் மனிதர்கள், சிதறிக்கிடக்கும் ஈசல்களைப் போல ஆகிவிடுவார்கள். மலைகள், உதிர்க்கப்பட்ட இழைபோல் ஆகிவிடும். (ஸூரா - அல்காரிஆ)

23. அந்நாளில் எவருடைய நன்மையின் எடை கனமாக இருக்குமோ, அவர் திருப்தியான வாழ்க்கையிலே இருப்பார். (ஸூரா - அல்காரிஆ)

24. ஆனால் எவருடைய நன்மையின் எடை (தீய செயல்களால்) இலேசாக இருக்குமோ, அவருடைய ஒதுங்குமிடம் ‘ஹாவியா’ ஆகும். (ஸூரா - அல்காரிஆ)

25. ‘ஹாவியா’ என்பது சுட்டெரிக்கும் நரகமாகும். (ஸூரா - அல்காரிஆ)

## ஒரு பார்வை - பகுதி 3

**ஸூரா அத்தகாஸூர் - மனிதனின் அழிவுக்குக் காரணம் அவன் உலக ஆதாயங்களுக்காக வாழ்வது. மறுமை வாழ்க்கைக்காக உழைப்பதே உண்மையான வெற்றி.**

**ஸூரா அல்அஸ்ர் - வெற்றிக்கான வழிகள்: அல்லாஹ்வை நம்புங்கள்; நல்ல செயல்களைச் செய்யுங்கள்; உண்மையுடனும் பொறுமையுடனும் இருங்கள்; மற்றவர்களுக்கு அதையே அறிவுறுத்துங்கள்.**

**ஸூரா அல்ஹூமஜா - புறம் பேசுபவர்கள், அவதூறு செய்பவர்கள், கஞ்சத்தனம் செய்பவர்கள் இவர்கள் அனைவரும் எரியும் நெருப்பில் வீசப்படுவார்கள்.**

**ஸூரா அல்ஃபீல் - கஃபாவை இடிக்க யானைப் படையுடன் வந்த 60,000 எதிரிகளை, அல்லாஹ் ஒரு பறவைக் கூட்டத்தை வைத்து அழித்த சம்பவம்.**

## தராவிஹ் - 27: (ரக்அத் 9 முதல் 12)

**ஸூரா - 102, அத்தகாஸூர்; வசனம்: 1 - 8; பிரிவு: 1**

1. **மனிதர்களே! இவ்வுலகத்தில் செல்வத்தைப் பெருக்கும் ஆசை, உங்களை (அல்லாஹ்வை விட்டும்) தூரமாக்கி விட்டது. (ஸூரா - அத்தகாஸூர்)**

2. **அது எதுவரை எனில், நீங்கள் மரணம் அடைந்து மண்ணறைகளை சந்திக்கின்ற வரை. அவ்வாறில்லை! விரைவில் (அதன் விளைவை) நீங்கள் அறிந்து கொள்வீர்கள்! பிறகும், அவ்வாறில்லை! விரைவில் (அதன் விளைவை) நீங்கள் அறிந்து கொள்வீர்கள். (ஸூரா - அத்தகாஸூர்)**

3. **நீங்கள் நினைப்பது போன்றல்ல! நீங்கள் மட்டும் உறுதியாக அறிந்திருந்தால் அவ்வாறு நடந்திருக்காது. (ஸூரா - அத்தகாஸூர்)**

4. நிச்சயமாக நீங்கள் நரகத்தைக் கண்கூடாகக் காண்பீர்கள். (ஸூரா - அத்தகாஸூர்)

5. பின்னர் அந்நாளில், உங்களுக்கு வழங்கப்பட்ட அருட்கொடைகளை எவ்வாறு பயன்படுத்தினீர்கள் என்று நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள். (ஸூரா - அத்தகாஸூர்)

**ஸூரா - 103, அல்அஸ்ர்; வசனம்: 1 - 3; பிரிவு: 1**

6. காலத்தின் மீது சத்தியமாக! (ஸூரா - அல்அஸ்ர்)

7. நிச்சயமாக மனிதன் இழப்பில் இருக்கிறான். (ஸூரா - அல்அஸ்ர்)

8. யார் ஈமான் கொண்டு நல்லறங்கள் புரிந்து, (ஸூரா - அல்அஸ்ர்)

9. சத்தியத்தைக் கடைப்பிடிக்குமாறு ஒருவருக்கொருவர் உபதேசம் செய்துகொண்டும், பொறுமை காக்குமாறு ஒருவருக்கொருவர் உபதேசம் செய்துகொண்டும் இருக்கிறார்களோ அவர்களைத் தவிர. (ஸூரா - அல்அஸ்ர்)

**ஸூரா - 104, அல்ஹுமஜா; வசனம்: 1 - 9; பிரிவு: 1**

10. புறம் பேசி, குறை சொல்லித் திரியும் ஒவ்வொருவனுக்கும் கேடுதான். (ஸூரா - அல்ஹுமஜா)

11. அவன் எப்படிப்பட்டவன் எனில், பொருளைச் சேகரித்து, அதனை எண்ணி வைத்துக் கொண்டிருக்கின்றான். (ஸூரா - அல்ஹுமஜா)

12. தனது பொருள் தன்னை நிரந்தரமாக வாழ வைக்கும் என நினைத்துக் கொண்டிருக்கின்றான். (ஸூரா - அல்ஹூமஜா)

13. அவ்வாறில்லை! நிச்சயமாக அவன் 'ஹூதமாவில்' தூக்கி எறியப்படுவான். 'ஹூதமா' என்றால் என்ன என்று நபியே உமக்குத் தெரியுமா? அது அல்லாஹ்வின் கட்டளையின்படி எரிந்து கொண்டிருக்கும் நெருப்பாகும். (ஸூரா - அல்ஹூமஜா)

14. நிச்சயமாக அந்த நெருப்பு இதயங்களை சென்றடையும். உயரமான தூண்களில் அவர்கள் கட்டப்பட்டிருப்பார்கள். அனைத்துப் புறங்களிலும் அது அவர்களைச் சூழ்ந்து மூடப்படும். (ஸூரா - அல்ஹூமஜா)

**ஸூரா - 105, அல்ஃபீல்; வசனம்: 1 - 5; பிரிவு: 1**

(பின்னணி: அப்ரஹா மன்னனுடைய யானைப் படையினர், சுமார் 60,000 சிப்பாய்களுடனும், 9 முதல் 13 யானைகளுடனும் மக்காவிலுள்ள கஃபாவை இடிக்க புறப்பட்டு வந்தனர். இச்சம்பவம் நபி (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு 50 நாட்கள் முன்பு நடந்தது. அதற்கான குறிப்புகள் தான் இந்த ஸூராவில் உள்ளது.

அப்ரஹா ஆஷ்ரம் என்பவன் எமன் தேசத்துடைய அபிஸீனியா கவர்னர் ஆவான். அவன் கிறித்துவ மதத்தினர். அவன் சனா என்ற நகரில் (தற்போது எமனின் தலைநகரம்) ஒரு பெரிய கிறிஸ்தவ தேவாலயத்தை கட்டினான். அவன் அரேபியாவிலுள்ள மக்காவிற்கு வரும் யாத்ரீகர்களை இங்கு வரவழைப்பதற்காக மக்காவின் கஃபாவை அழிக்க சூளுரைத்து படையெடுத்து வந்தான்.

மக்கத்துவாசிகள் இந்த பெரும் படையை பார்த்து பயந்து அருகிலுள்ள மலைகளில் தஞ்சம் புகுந்து கஃபாவின் கடவுள் அதை காப்பாற்றுவார் என இருந்தனர். அந்த படைகள் மக்காவிற்கு 3 மைல் தொலைவில் வந்தபோது, கடலிலிருந்து ஒரு பறவைக்கூட்டம் தனது அலகுகளில் கற்களை சுமந்து வந்து, அந்த படைகள் மீது போட்டது. அந்த கற்கள் அவர்கள் மீது விழுந்தவுடன், ஒருபுறத்திலிருந்து மறுபுறம் வழியே வெளியேறியது. இதனால் அப்படைகள் பீதியுற்றது. அவர்களது தோல்களில் அரிப்பு ஏற்பட்டு சதைகள் கீழே விழுந்தன. இவ்வாறாக யானைப்படைகள் அழிக்கப்பட்டன. அப்ரஹாவும் அழிக்கப்பட்டான். இறைவனின் அருளால் கஃபா ஆலயம் காப்பாற்றப்பட்ட செய்தி வேகமாக பரவியது. இதன் மூலம் கஃபாவின் மகிமை உயர்ந்தது).

15. யானைப்படைகள் மீது உமது இறைவனின் நடவடிக்கை எவ்வாறு இருந்ததென்று நீர் கவனிக்கவில்லையா? (ஸூரா - அல்ஃபீல்)

16. அவர்களுடைய சூழ்ச்சி நிறைந்த திட்டத்தை அல்லாஹ், தோல்வியடையச் செய்யவில்லையா? (ஸூரா - அல்ஃபீல்)

17. அவர்கள் மீது பறவைகளை கூட்டம் கூட்டமாக அவன் அனுப்பினான். அவை சுடப்பட்ட சிறு கற்களை, அவர்கள்மீது எறிந்தன. அதன் பிறகு, மென்று தின்னப்பட்ட வைக்கோலைப் போல அவர்களை, அவன் ஆக்கிவிட்டான். (ஸூரா - அல்ஃபீல்)

## ஒரு பார்வை - பகுதி 4

**ஸூரா குறைஷ் - உங்கள் வாழ்வாதாரத்தை வழங்கும் அல்லாஹ்வை நம்புவதற்கான அறிவுரை.**

**ஸூரா அல்மாஊன் - மறுமையை நம்பாமல் இருப்பதே, மனிதனின் அழிவுக்கு முக்கிய காரணமாகும். தொழுகையை அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுவதன் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.**

**ஸூரா அல்கவ்ஸர் - முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பெயரை அல்லாஹ் என்றென்றும் நிலைத்திருக்கச் செய்தான்.**

**ஸூரா அல்கா∴பிரூன் - இஸ்லாத்தின் விஷயங்களில் சமரசம் செய்யக்கூடாது என்ற அல்லாஹ்வின் கட்டளை.**

**ஸூரா அந்நஸ்ர் - வெற்றி என்பது அல்லாஹ்வின் உதவியால் மட்டுமே வரும். அந்த வெற்றி மகிழ்வதற்கான சந்தர்ப்பம் அல்ல, மாறாக அல்லாஹ்வை மகிமைப்படுத்துவது.**

## தராவிஹ் - 27: (ரக்அத் 13 முதல் 16)

### ஸூரா - 106, குரைஷ்; வசனம்: 1 - 4; பிரிவு: 1

**பின்னணி: அரேபியா முழுவதும் வியாபரத்தில் குரைஷிகளுக்கென்று மிகுந்த செல்வாக்கு இருந்தது. குரைஷிகள், க∴பாவின் பாதுகாவலர்களாக இருந்ததால் அண்டை நாட்டினர் அவர்களுக்கு மிகுந்த மதிப்பளித்து வந்தார்கள். ஸூரா அல்∴பீலில் கூறப்பட்ட யானைப் படையினருடைய சம்பவத்திற்கு பிறகு, க∴பாவை பாதுகாப்பதில் இருந்த அல்லாஹ்வின் வல்லமையை புரிந்துகொண்டனர். குரைஷிகள் வியாபார ரீதியாக தங்களுடைய பாதுகாப்பினை உணர்ந்து மிகப்பெரிய அளவில் மகிழ்ந்திருந்தனர். அல்லாஹ்வினுடைய இந்த அருட்கொடையினைக் குறித்து இந்த ஸூராவில் சுட்டிக்காட்டி, “இந்த க∴பாவின் இறைவனை அவர்கள் வணங்க வேண்டாமா?" என்று அவர்களிடம் கேட்கின்றான்.**

1. குரைஷிகள் பாதுகாப்பாக மகிழ்ச்சியுடன் இருப்பதற்காக, (ஸூரா - குரைஷ்)

2. கோடை காலத்திலும், குளிர் காலத்திலும் அவர்கள் செய்கின்ற வியாபார பயணத்தில் பாதுகாப்போடும், மகிழ்ச்சியோடும் இருப்பதற்காக, (ஸூரா - குரைஷ்)

3. அவர்கள் இந்த (கஃபா) என்னும் இறைஆலயத்தை வழிபடட்டும். (ஸூரா - குரைஷ்)

4. அல்லாஹ் அவர்களுக்கு பசியிலிருந்து உணவளித்தவன்; பயத்திலிருந்து அவர்களுக்கு நிம்மதியை வழங்கியவன். (ஸூரா - குரைஷ்)

**ஸூரா - 107, அல்மாஊன்; வசனம்: 1 - 7; பிரிவு: 1**

5. நபியே! விசாரணை நாளை பொய்யென்று கூறுபவனை நீர் பார்த்தீரா? (ஸூரா - அல்மாஊன்)

6. அவன்தான் அநாதைகளை விரட்டுகின்றவன். ஏழைகளுக்கு உணவு வழங்கிட அவன் மற்றவர்களைத் தூண்ட மாட்டான். (ஸூரா - அல்மாஊன்)

7. (அந்த) தொழுகையாளிகளுக்குக் கேடுதான். அவர்கள் தமது தொழுகையில் கவனமற்றவர்கள். (ஸூரா - அல்மாஊன்)

8. அவர்கள் பிறருக்கு காட்டவே தொழுவார்கள். (மற்றவர் நலனுக்காக) அற்பப் பொருளைக்கூட பிறருக்குக் கொடுக்க மறுப்பார்கள். (ஸூரா - அல்மாஊன்)

**ஸூரா - 108, அல்கவ்ஸர்; வசனம்: 1 - 3; பிரிவு: 1**

(பின்னணி: அல்லாஹ்வினுடைய வசனங்கள் மக்காவில் இறங்கிக் கொண்டிருந்த ஆரம்பகட்டம் இது. நபி (ஸல்) அவர்களுடைய முதல் மகன் காஸிமும், அதன் பிறகு இரண்டாவது மகன் அப்துல்லாஹ்வும் இறந்து விடுகின்றனர். நபியவர்களுடைய 4 மகள்கள் மட்டுமே இருந்தனர். இதனைப் பார்த்த இறைமறுப்பாளர்கள், முஹம்மது வாரிசு இல்லாதவராகிவிட்டார் என்று பழித்தனர். இந்த ஸூராவில் அல்லாஹ், நபியவர்களுக்கு நற்செய்தி சொல்லிவிட்டு, யார் நபியைப் பார்த்து அவ்வாறு சொன்னானோ, அவன்தான் வாரிசு இல்லாதவன் என்று குறிப்பிடுகிறான்).

9. நபியே! நிச்சயமாக நாம் உமக்கு ‘கௌஸர்’ - நீர்த்தடாகத்தை வழங்கியுள்ளோம். (மறுமை நாளில் அல்லாஹ், நபியவர்களுக்கு வழங்கவிருக்கின்ற பிரத்யேகமான நீர்த்தடாகத்தின் பெயர் ‘கௌஸர்’. (ஸூரா - அல்கவ்ஸர்)

10. ஆகவே உமது இறைவனுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு அவனை தொழுது, குர்பானி கொடுப்பீராக! (ஸூரா - அல்கவ்ஸர்)

11. நிச்சயமாக, உம்முடைய எதிரிதான் சந்ததி அற்றவன். (ஸூரா - அல்கவ்ஸர்)

**ஸூரா - 109, அல்கா.:.பிரூன்; வசனம்: 1 - 6; பிரிவு: 1**

(பின்னணி: ஆரம்ப காலகட்டத்தில் இஸ்லாத்திற்கு பெரும் எதிர்ப்பு இருந்த நேரத்தில், குரைஷித் தலைவர்கள் முஹம்மது நபி (ஸல்) அவர்களிடம் பேசி ஒரு சமாதானத்துக்கு வரலாம் என எண்ணினர். அவர்கள் நபி அவர்களை சந்தித்து இரண்டு திட்டங்களை முன்வைத்தனர். இஸ்லாத்தின் பிரச்சாரத்தை நபியவர்கள் நிறுத்த வேண்டும். அவ்வாறு நிறுத்திவிட்டால்

நபியவர்களுக்கு மிகப் பொரும் செல்வங்களையும், மக்காவின் ஆட்சியினையுக் வழங்கி, அவர் விரும்பும் பெண்களை திருமணம் செய்து வைப்பதாகவும் ஆசைவார்த்தை கூறினர்.

இதில் உடன்பாடு இல்லையென்றால் நபிகளார் குரைஷிகளின் கடவுள்களை ஒரு வருடம் வணங்கவேண்டும். மறுவருடம் குரைஷிகள், அல்லாஹ்வை வணங்கவேண்டும் என இரண்டாவது திட்டத்தை முன்வைத்தனர்.

குரைஷிகளின் இந்த சதித் திட்டத்துக்கு உறுதியான பதிலாக இந்த ஸூரா இறங்கியது).

12. நபியே! நீர் கூறுவீராக: "இறைமறுப்பாளர்களே! நீங்கள் வணங்குகின்றவற்றை நான் வணங்க மாட்டேன்". (ஸூரா - அல்கா:ஃபிரூன்)

13. நான் வணங்குகின்றவனை நீங்கள் வணங்கக்கூடியவர்கள் அல்லர். (ஸூரா - அல்கா:ஃபிரூன்)

14. நிச்சயமாக நீங்கள் வணங்குகின்றவற்றை ஒருபோதும் நான் வணங்கமாட்டேன். (ஸூரா - அல்கா:ஃபிரூன்)

15. நான் வணங்குகின்றவனை நிச்சயமாக நீங்கள் வணங்கப்போவதில்லை. (ஸூரா - அல்கா:ஃபிரூன்)

16. உங்கள் மார்க்கம் உங்களுக்கு; என் மார்க்கம் எனக்கு. (ஸூரா - அல்கா:ஃபிரூன்)

**ஸூரா - 110, அந்நஸ்ர்; வசனம்: 1 - 3; பிரிவு: 1**

(பின்னணி: இந்த ஸூரா, ஹஜ்ஜதுல் விதாவின்போது மினாவில் இறங்கியது. மேலும் இதில் நபியவர்கள், இந்த

உலகில் எதற்காக அனுப்பட்டார்களோ அந்த நபித்துவப் பணி முடிவுக்கு வந்து விட்டதை இது உணர்த்துகிறது, ஆகவே, நபியவர்கள் அல்லாஹ்வைப் புகழ்ந்து, அவனது கிருபையையும் மன்னிப்பையும் கோரவேண்டும். இந்த ஸூரா இறங்கிய அதே வருடம் நபி (ஸல்) அவர்கள் வஃபாத்தாகி விட்டார்கள்).

17. அல்லாஹ்வினுடைய உதவியும், வெற்றியும் வரும் போது, (ஸூரா - அந்நஸ்ர்)

18. மக்கள் இஸ்லாத்தின்பால் கூட்டம் கூட்டமாக வருவதை (நபியே!) நீர் காண்பீர். (ஸூரா - அந்நஸ்ர்)

19. ஆகவே உமது இறைவனின் புகழைந்து துதி பாடுவீராக! அவனிடமே மன்னிப்புத் தேடுவீராக! நிச்சயமாக அவன் மன்னிப்பை ஏற்பதற்கு தயாராக இருப்பவன். (ஸூரா - அந்நஸ்ர்)

## ஒரு பார்வை - பகுதி 5

**ஸூரா அல்லஹப் - முஹம்மது நபி (ஸல்) அவர்களின் எதிரிகளான அபூலஹபையும், அவனது மனைவியையும் அல்லாஹ் சபித்துவிட்டான்.**

**ஸூரா அல்இக்லாஸ் - அல்லாஹ்வின் தனித்துவமான பண்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன.**

**ஸூரா அல்ஃபலக் & ஸூரா அந்நாஸ் - எல்லா தீமைகளிலிருந்தும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுங்கள். ஷைத்தான், விஷமிகளின் தீங்கிலிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுங்கள்.**

## தராவிஹ் - 27: (ரக்அத் 17 முதல் 20)

**ஸூரா - 111, அல்லஹப்; வசனம்: 1 - 5; பிரிவு: 1**

**(பின்னணி: குர்ஆனில் ஒருவனுடைய பெயர்சொல்லி சபிக்கப்பட்டிருக்கிறதென்றால் அது இந்த ஒரு இடம்தான். அபூலஹப், நபியவர்களுடைய பெரிய தந்தையாக இருந்தும், இஸ்லாத்தைக் கடுமையாக எதிர்த்து, நபி (ஸல்) அவர்களுக்கு பெரும் துன்பத்தைக் கொடுத்து வந்தான்.**

**நபித்துவத்திற்கு முன்பு, நபியவர்களுடைய இரு மகள்களை அபூலஹபின் இரு மகன்கள் திருமணம் முடித்திருந்தார்கள். நபி (ஸல்) அவர்கள், இஸ்லாமிய அழைப்புப் பணியை மேற்கொண்டபோது, நபியினுடைய இரண்டு மகள்களையும் விவாகரத்து செய்திடும்படி அபூலஹப் தன்னுடைய இரு மகன்களையும் வற்புறுத்தினான். நபி (ஸல்) அவர்கள், எங்கெல்லாம் பிரச்சாரப் பணியினை மேற்கொள்ள புறப்படுவார்களோ, அங்கெல்லாம் அவர்களைப் பின்தொடர்ந்து சென்று, "இவர் ஒரு பொய்யர் என்றும், இவரை கல்லால் அடியுங்கள்" என்றும் அவன் மக்களிடம் பொய்ப் பிரச்சாரம் செய்துவந்தான். ஆகையால் அவன் பெரும் கண்டனத்துக்கு உரியவன் என்பதை இந்த ஸூரா எடுத்துரைக்கிறது.**

1. அபூலஹபின் இரு கைகள் அழியட்டும்; அவனும் அழியட்டும். (ஸூரா - அல்லஹப்)

2. அவனுடைய செல்வமோ அவன் தேடிக்கொண்டதோ அவனைக் காப்பாற்றப் போவதில்லை. (ஸூரா - அல்லஹப்)

3. விரைவில் அவன், கொழுந்து விட்டெறியும் நெருப்பில் நுழைவான். விறகைச் சுமக்கும் அவனது மனைவியும் நுழைவாள். அவளுடைய கழுத்தில் பேரிச்ச மர நாரினால் ஆன கயிறு இருக்கும். (நபிகளார் நடந்து செல்லும் பாதையில், அவள் முட்களை போட்டுவைத்தாள் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.). (ஸூரா - அல்லஹப்)

**ஸூரா - 112, அல்இக்லாஸ்; வசனம்: 1 - 4; பிரிவு: 1**

அல்லாஹ்வினுடைய பிரத்யேகமான தன்மைகள் இந்த சிறிய ஸூராவில் கூறப்பட்டுள்ளன.

4. நபியே நீர் கூறுவீராக! "அவன் அல்லாஹ்; அவன் ஒருவனே!" (ஸூரா - அல்இக்லாஸ்)

5. அல்லாஹ் தேவையற்றவன். (நாம் அனைவரும்தான் அவனிடம் தேவையுள்ளவர்களாக இருக்கின்றோம்). (ஸூரா - அல்இக்லாஸ்)

6. அவன் யாரையும் பெற்றெடுக்கவில்லை, அவன் யாராலும் பெற்றெடுக்கப்படவுமில்லை. (ஸூரா - அல்இக்லாஸ்)

7. அவனுக்கு நிகராக யாருமில்லை. (ஸூரா - அல்இக்லாஸ்)

**ஸூரா - 113, அல்ஃபலக்; வசனம்: 1 - 5; பிரிவு: 1**

8. நபியே நீர் கூறுவீராக! "விடியலின் இறைவனிடம் நான் பாதுகாவல் தேடுகின்றேன்". (ஸூரா - அல்ஃபலக்)

9. அவன் படைத்துள்ள படைப்பினங்களின் மூலம் ஏற்படும் தீங்கிலிருந்தும், இருள் படரும் இரவின் தீங்கிலிருந்தும், (ஸூரா - அல்ஃபலக்)

10. முடிச்சுகளில் ஊதுகின்ற, சூதுக்கார பெண்களின் (மந்திர, மாயாஜால) தீங்கிலிருந்தும், (ஸூரா - அல்ஃபலக்)

11. பொறாமை கொள்ளும் பொறாமைக்காரர்களின் தீங்கிலிருந்தும் நான் பாதுகாவல் தேடுகின்றேன். (ஸூரா - அல்ஃபலக்)

**ஸூரா - 114, அந்நாஸ்; வசனம்: 1 - 6; பிரிவு: 1**

1. நபியே நீர் கூறுவீராக! "மனிதர்களைப் படைத்துப் பரிபாலிக்கும் இறைவனிடம் நான் பாதுகாவல் தேடுகின்றேன். அவனே மனித சமுதாயத்தின் அரசன். அவனே மனித சமுதாயத்தின் உண்மையான வணக்கத்திற்குரிய இறைவன். (ஸூரா - அந்நாஸ்)

2. மனிதர்களின் உள்ளங்களில் வீணான சந்தேகங்களை உண்டு பண்ணிவிட்டு மறைந்துகொள்ளும் ஷைத்தான் - விஷமிகளின் தீங்கிலிலிருந்து பாதுகாவல் தேடுகின்றேன். (ஸூரா - அந்நாஸ்)

3. அப்படிப்பட்ட விஷமிகள், ஜின்களிலும் இருக்கின்றனர்; மனிதர்களிலும் இருக்கின்றனர். (ஸூரா - அந்நாஸ்)

## ஸூரா - 1, அல்ஃபாத்திஹா; வசனம்: 1 - 7; பிரிவு: 1

1. அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் (துவங்குகிறேன்).
2. அனைத்துப் புகழும் உலக மக்களைப் படைத்து பரிபாலிக்கின்ற அல்லாஹ்விற்கே உரியது.
3. அவன் அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்.
4. நியாயத் தீர்ப்பு நாளின் அதிபதி.
5. உன்னையே நாங்கள் வணங்குகின்றோம். உன்னிடமே நாங்கள் உதவியும் தேடுகிறோம்
6. இறைவா! எங்களுக்கு நேர்வழியை காட்டுவாயாக!
7. யார் மீது நீ அருள் புரிந்தாயோ அந்த வழியினை. உன் கோபத்தைச் சம்பாதித்தவர்களின் வழியுமல்ல; வழி தவறியவர்களின் வழியுமல்ல.

## ஸூரா - 2, அல்பகரா; வசனம்: 1 - 5; பிரிவு: 1

1. அலிஃப், லாம், மீம்! இந்த வேதம், இதில் எந்த சந்தேகமுமில்லை.
2. அல்லாஹ்வை அஞ்சுவோருக்கு இதில் வழிகாட்டுதலுண்டு.
3. அவர்கள் எப்படிப்பட்டவர்களென்றால் மறைவானவற்றை ஈமான் கொண்டிருப்பார்கள்; தொழுகையை நிலை நாட்டுவார்கள்; நாம் அவர்களுக்கு வழங்கியதிலிருந்து நல்வழியில் செலவிடுவார்கள்.
4. முஹம்மது (ஸல்) அவர்களே! உம்மீது இறக்கி வைத்த வேதத்தையும், உமக்கு முன் இறக்கி வைத்த தௌராத், ஜபூர், இஞ்சீல் ஆகியவற்றையும் ஈமான் கொள்வார்கள். மேலும் மறுமை நாளையும் உறுதியாக நம்புவார்கள்.
5. அவர்கள்தான் அவர்களுடைய இறைவனின் நேர்வழியில் இருப்பவர்கள். மேலும் அவர்கள்தான் வெற்றியாளர்கள்.

---

# <u>கத்முல் குர்ஆன் துஆ</u>

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் (துவங்குகிறேன்).

யா அல்லாஹ்! எங்கள் கப்ருகளில் எங்களது பயத்தை போக்கி உனது அன்பை அளிப்பாயாக! எங்கள் இறைவா! இந்த திருக்குர்ஆன் மூலம் எங்களுக்கு உனது கருணையை பொழிவாயாக! திருக்குர்ஆனை சிறந்த வழிகாட்டியாகவும், ஒளியாகவும் ஆக்கி அதன் மூலம் நீ கூறிய வழியை பின்பற்றி உனது அருளைப் பெற எங்களுக்கு துணைபுரிவாயாக! எங்கள் இரட்சகனே! நாங்கள் மறந்தவைகளை எங்களுக்கு நினைவுபடுத்தித் தருவாயாக! எங்களுக்கு தேவையான நாங்கள் அறியாதவற்றை தெரிந்துகொள்ள எங்களுக்கு வழிவகை செய்து தருவாயாக! அனைத்தையும் பரிபாலிக்கும் எங்கள் அல்லாஹ்வே! இந்த திருக்குர்ஆன் என்னும் பொக்கிஷத்தை இரவிலும், பகலிலும் நாங்கள் ஓதுவதற்கும் அதன்மூலம் எங்கள் வாழ்வில் உனது தயவை பெறுவதற்கும் அருள்புரிவாயாக! ஆமீன்!